உ

சிவமயம்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் துணை



நாட்டுக்கோட்டை நகரத்தார் உபதேச குருபீடம்
பாண்டியநாட்டு முதன்மை ஈசான சிவாச்சாரியார்

**ஸ்ரீலஸ்ரீ ரவீந்திரர் (எ) காமாட்சி சுந்தர சுவாமிகள்** எம்.ஏ.,

தர்க்க வேதாந்த வித்வான் ப்ரவீண்

பாதரக்குடி – மானகிரி அஞ்சல் – 630 185 போன் : 236185

காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

*நாள் : 28.02.2006*

அன்புள்ள தேவகோட்டை நகரத்தார் பெருமக்களுக்கு சகல நன்மைகளும் உண்டாவதாக ஆசீர்வாதம் செய்து எழுதியதிப்பவும்.

தேவகோட்டை நகரத்தார்கள் புள்ளி விவரப் புத்தகம் வெளியிடுவதையறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம்.

தேவகோட்டையில்தான் நகரத்தார் புள்ளி அதிகம். மதுரை, காளஹஸ்தி, காசி முதலிய அனைத்து சிவக்ஷேத்திரங்களிலும் தேடிச் சென்று திருப்பணி செய்துள்ளவர்கள் தேவகோட்டை நகரத்தார்களேயாவர்.

தவறாமல் உபதேசம் கேட்பதிலும், சிவபூஜை செய்வதிலும் சிறந்தவர்கள் தேவகோட்டை நகரத்தார்களே. உபதேச குருபீடங்களையும் அவர்களே பராமரித்து வருகிறார்கள். தேவகோட்டை நகரச் சிவன் கோவிலில் உபதேசத்தை முன்னிட்டு மகாமந்திரோபதேச மண்டபம் ஒன்றும் ஏற்படுத்தியுள்ளனர்.

தேவகோட்டை நகரத்தார் புள்ளி விவரப் புத்தகம், தேவகோட்டை நகரத்தார்களின் பெருமையை அனைவரும் அறிய உதவுவதுடன் நகரத்தார் இளைஞர்களின் வேலை வாய்ப்பு, திருமணம், தொழில் முன்னேற்றம் முதலியவற்றுக்கும் உதவும். ஏன்? இணையதளம்கூட ஏற்படுத்தலாம். நூல் சிறப்பாக வெளிவரவும் தேவகோட்டை நகரத்தார்கள் எல்லா முன்னேற்றங்களையும் அடையவும் எல்லாம் வல்ல ஸ்ரீ பழம்பதிநாதர் திருவருளைப் பிரார்த்திக்கிறோம். சுபம்.

ஸ்ரீ பழம்பதிநாதர் துணை



உ
சிவமயம்


## ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

மடாதிபதி, துலாவூர் மடம், குன்னக்குடி வழி,
சிவகங்கை மாவட்டம் - 630 206 தமிழ்நாடு


பார்த்திப வருடம் மாசி மாதம் 10 ஆம் தேதி (22.02.2006)

# வாழ்த்துரை

நமது செட்டிநாட்டின் தலைநகர் போல் விளங்குவது தேவகோட்டை நன்னகர். இங்குள்ள நகரத்தார்கள் குருபக்தி, சிவபக்தி மிக்கவர்கள். இளம் வயதிலேயே சைவ சமய தீட்சை பெற்று அதன்படி வாழ்பவர்கள். நகரத்தார் வரலாற்றிலும் சிவாகமங்களிலும் தோத்திர சாத்திரங்களிலும் மிகுந்த விருப்பங்கொண்டவர்கள். அவற்றைப் புத்தகமாக வெளியிடுபவர்கள். இப்போது தேவகோட்டை நகரத்தார் புள்ளி விபரங்கள் என்ற நூல் வெளியிடப்பெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

தேவகோட்டை நகரத்தார்கள் எதிலும் முன்னோடிகளாகத் திகழ்பவர்கள். மற்ற ஊர் நகரத்தார்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்பவர்கள். தேவகோட்டை ஸ்ரீமான் வீர.லெ. சிந்நயச் செட்டியார், துலாவூர் ஆதீன மடத்திலிருந்து ஏட்டுச் சுவடிகளை வாங்கிக் கொண்டு போய் தன வைசிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம் என்ற நூலை முதன் முதலாக 1894ல் வெளியிட்டார்கள். இரண்டாம் பதிப்பு 1904ல் வெளியிட்டார்கள். மற்றொரு நகரத்தார் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் நிறுவி சிவபூஜா விதி, பரார்த்த நித்திய பூஜா விதி, சைவபூஷணம், சிவார்ச்சனை சந்திரிகை போன்ற பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

இப்போது தேவகோட்டை நகரத்தார்கள் “தேவகோட்டை நகரத்தார் புள்ளி விவரங்கள்” என்ற நூலை வெளியிடவிருக்கிறார்கள். இந்நூல் சிறப்பாக அமைய திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

நலமே தழைக.

ஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447,
எண் : 7, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 0091 44 2434 2926
தொலைநகல் : 0091 44 2434 6082
மின்அஞ்சல் : manimekalai@eth.net
மின்இணையம் : tamilvanan.com

**லேனா தமிழ்வாணன்**
**பத்திரிக்கையாளர், பதிப்பாளர்.**



உ
சிவமயம்

# வாழ்த்துரை

குருவி, தான்யம் சேர்ப்பதுபோல் இந்த 4,663 புள்ளிகளைச் சேர்த்து அழகுறக் கோலமிட்டிருக்கிறார்கள், துடுப்பூரார் வீட்டிற்குப் பெருமை சேர்க்கும் அண்ணன் சுப.வீர.சுப்பையா மற்றும் மு.மா. அசோக்குமார் அவர்கள்.

தேவகோட்டைப் பெருமக்கள் எவ்வளவோபேர் இருக்க, இந்த எளியவனிடம் வாழ்த்துரை கேட்கிறார்களே என்று பூரித்துப்போனேன். இந்த அரிய முயற்சி வேறு எவராலும் சாதிக்க முடியாத ஒன்று!

புள்ளிகளைப் பற்றிய புள்ளிவிவரங்கள்தாம் இவை என்று ஒதுக்கிவிட முடியாதபடி, இந்தத் தலைமுறையும் இனி வரப்போகும் தலைமுறையும் தெரிந்து கொள்ளவேண்டிய அரிய செய்திகளைச் சேகரித்திருக்கிறார்கள்.

தேவகோட்டை நகரத்தார்களின் அரிய ஆன்மீகப் பணிகளை, கொட்டிக்கொடுத்த வள்ளல்களை இந்த நூல் நமக்கு நன்கு அடையாளம் காட்டுகிறது (அடேயப்பா - எப்படித்தான் திரட்டினார்களோ?)

முதல் முயற்சி என்பது ஒரு குழந்தையின் தளிர் நடை போன்றது. ஆனால் இந்த முதல் குழந்தை எடுத்த எடுப்பிலேயே ராஜநடை போட்டிருக்கிறது.

சொந்தப் பங்காளிகளுக்குக்கூடச் சரியான முகவரிப் பட்டியலைத் தயாரித்து வைத்திராத புள்ளிகளை நிறையப் பார்க்கிறோம். இந்தக் கோணத்தில் பார்த்தால் செட்டிநாட்டின் மிகப் பெரிய ஊரான தேவகோட்டைக்கே புள்ளிப்பட்டியல் தயாரித்திருப்பது என்பது இமாலய சாதனை.

இரட்டையரை மீண்டும் பாராட்டி மகிழ்கிறேன்.

அன்புடன்
லேனா தமிழ்வாணன்

உ
சிவமயம்

# தேவகோட்டை நகரத்தார் வளர்க ! வாழ்க !

**கவித்தென்றல் காசு. மணியன், ஆத்தங்குடி.**



**சீ**ர்மிகுந்த தமிழோடு சைவம் காத்த
செட்டிநாட்டுப் பகுதியிலே தேவ கோட்டை
ஊரினிலே பெரிதாகும்; கோயில் நல்ல
ஒன்பதிலே சூரக்குடி தவிர எட்டுப்
பேர்பெற்ற கோயிலார் வாழும் ஊராம்
புள்ளிசுமார் நாலாயிரத்து எழுநூ றாகும்
ஆர்வமுடன் இவ்வூரார் உலக மெங்கும்
அறப்பணியில், பொதுப்பணியில் புகழைப் பெற்றார் !

சிறந்தபல கோயில்கள் இங்கு உண்டு;
சேக்கிழார் சன்னதியும் சிறப்பாய் உண்டு;
நிறைந்தநீர் ஊருணிகள் நிறைய உண்டு;
நீடுதமிழ் இசைவளர்த்த புகழும் உண்டு;
சிறைசென்ற தியாகிகளும் இங்கு உண்டு;
தேர்ந்ததமிழ் அறிஞர்களும் அதிகம் உண்டு;
வரலாற்றில் நீதிமன்றம் எரிக்கப் பெற்ற
வரலாறும் இவ்வூரின் சிறப்பில் உண்டு.

நாற்பதுநல் வகைசார்ந்த இந்த ஊரில்
நகரத்தார் வாழ்கின்றார்; கோயில் கணக்கு
பார்ப்பதற்கு ஐந்துவகை நகரத் தார்கள்
பரம்பரையாய் இரண்டாண்டிற் கொருமுறை யாக
ஆர்வமுடன் பணிபுரிவார்; கந்தர் சஷ்டி
அறுபதாண்டாய் நடப்பதுவும் பெருமை யாகும்.
பேர்பெற்ற இவ்வூரின் நகரத் தார்கள்
பிரபலமாய் வாழ்கின்றார்; வளர்க! வாழ்க!

மருத்துவநல் மனையோடு பள்ளிக் கூடம்
மற்றும்பல கல்லூரி, பதிப்ப கத்தார்
மருத்துவர்கள் ஐ.ஏ.எஸ். உச்ச நீதி
மன்றத்தில் நீதிபதி இவர்க ளோடு
திருமணமாம் சேவைசெய்வோர், எழுத்தா ளர்கள்
சிறந்தபல வள்ளல்கள், சான்றோ ரோடு
திருவளரும் பெருநகராம் பலரும் போற்றும்
**தேவகோட்டை நகரத்தார்** வளர்க! வாழ்க!

உ

சிவமயம்

# வணக்கப் பாமாலை

**மகாகவி, டாக்டர் அர. சிங்கார வடிவேலன்,** கண்டனூர்



**தி**ருவளரும் நாற்றங்கால் செட்டி நாடு
திருப்பணிக்குப் பிறந்தவர்கள் நகரத் தார்கள்
கருவளரும் காலத்தே செட்டிப் பிள்ளை
கையிரண்டை நற்பணிக்கே கடவுள் செய்வான்
தெருவளரும் விலாசங்கள் அறத்தின் சான்று
திசைவளரும் கோயிலெலாம் தெய்வச் சாட்சி
மருவளரும் பாமாலை நகரத் தாரின்
மலரடிக்கு மகாகவி சூட்டு வேனே.

மருதிருவர் ஆள்பகுதி சேது மன்னர்
மாவட்டம் இரண்டிற்குள் குடிய மர்ந்தார்;
இருபுனலைப் பயன்கொண்டு வளர்ச்சி பெற்றார்
இடிமழையும் தொடுபுனலும் அவ்வி ரண்டாம்;
வருவாய்க்கே ஆண்களெலாம் கடலுக் கப்பால்
வருவாயில் வாழூரில் தருமம் தானம்;
திருமகளின் அருள்பெற்றார் தொண்ணூற் றாறு
சிற்றூர்கள் வாழ்பகுதி செட்டி நாடே.

கடலோடிப் பொருள்குவிக்கும் செட்டி மக்கள்
கடல்மேவிப் பொருள்கவரப் பூம்பு காரை
விடலறியா விருப்போடு விட்டு நீங்கி
மேடான பாண்டிநாட்டுக் குடியாய் வந்தார்
அடவியெனும் காடழித்து நிலம்தி ருத்தி
அகங்களினைக் கோட்டைகளாய்க் கட்டி வாழ்ந்தார்
உடன்நாட்டார் கோட்டைகளை “நகரம்” என்றார்
உள்வாழ்ந்தார் **“நகரத்தார்”** பெயர்பெற் றாரே

ஆறுமுகன் குன்றான குடிக்கு நான்காய்
அமைதிக்கில் வட்டகைகள் நாலாய் வாழ்ந்தார்
ஏறுபுகழ்ச் செட்டிநாட்டின் தெற்குப் பக்கம்
ஏறெனவே நிமிர்நகரம் **தேவ கோட்டை**
நீறுதவழ் நெற்றியிலே மூன்று பட்டை
நிலாவுருண்டைச் சந்தனத்தில் சிவப்புப் பொட்டு
கூறுகுரல் தொண்டையிலே உருத்தி ராட்சம்
கோட்டைவாழ் நகரத்தார் சின்ன மாமே.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபான் இரண்டில்
ஆகஸ்டின் முன்வரும்நல் ஜூலை ஒன்றில்
தாயினுமேல் அன்புமிக்க “கல்வி வள்ளல்”
தமிழ்வளர்க்கும் பேறுதந்தார்; தழைக்கச் சென்றேன்
வாயினிக்க மனமினிக்க வரவேற் றார்கள்
மக்களுக்கும் மணமுடிக்க வகைசெய் தார்கள்
சேய்களிலே இளையமகன், டாக்டர் பட்டம்
சிறப்பெல்லாம் தேவகோட்டை நகரால் தானே.

வளவுக்குள் புதுவாழ்வு தொடங்கி வைக்க
மணமக்கள் உள்ளூரில் தேடு வார்கள்
அளவுக்குத் தக்கபடி வகைபார்ப் பார்கள்
அயலூரில் சம்பந்தம் அத்திப் பூவே
அளவாகச் செலவழிப்பார் எளிய வாழ்க்கை
அகத்தரசி தாலியையும் கடவுட் கீவார்
உளத்தாலே அவரவரும் தேவ கோட்டை
ஊர்ப்பற்றால் எங்கெனினும் ஒன்றா வாரே.

ஆன்மீகம் தேவகோட்டை அஸ்தி வாரம்;
அங்குள்ளார் பெரும்பகுதி பக்தி மான்கள்;
ஊன்கலந்தும் உயிர்கலந்தும் இனிக்கும் சைவம்;
உயர்ந்ததமிழ் அவர்களுக்கு வீட்டுப் பாடம்;
தேன்கலந்த பாலாகும் தேவா ரங்கள்;
திருக்கலந்த வாசகமும் பூணா ரங்கள்;
மான்வயிற்றுப் புள்ளிமயில் மணந்த வேலன்
மற்புரிந்த சஷ்டிவிழா புகழின் உச்சி.

பொன்பாரார் பொருள்பாரார் ஆளின் செய்கை
புகழிகளின் காரணமாய்ப் பொருத்திப் பார்ப்பார்
தன்சுற்றம் தன்னுறவாம் என்று பாரார்
தன்மையினால் எடைபோட்டுத் தரத்தைப் பார்ப்பார்
என்செய்கை என்றாலும் சுழியைப் போட
ஏடெடுத்து ஜமீன்தார் வீட்டைச் சேர்வார்
என்வாழ்வில் ஏற்றங்கள் தேவ கோட்டை
ஏணியினால் அமைந்ததனால் வணக்கம் கோடி

ஒவ்வொருவர் வீடாகச் சென்று சென்றே
உளமார்ந்த நன்றியினை வணங்கிச் சொல்ல
எவ்வாறு வாய்ப்புவரும் என்றி ருந்தேன்
ஏக்கத்தைச் **சுப்பையா அசோக் குமாரும்**
இவ்வரிய முகவரியின் புத்த கத்தால்
என்றனுக்குத் தீர்த்தார்கள் அவர்க்கு நன்றி
ஒவ்வொரு கால்களுக்கும் வணக்கம் நன்றி
ஊருயர வாழ்த்துக்கள் கோடி கோடி.

சிக்கனத்தைப் பேணுகின்ற ஆச்சி மார்கள்
சிவன்கோயில் கோபுரம்போல் செழித்து வாழி !
எக்கணமும் சிவன்நாமம் உச்ச ரிக்கும்
இளையவரும் பெரியவரும் குன்றாய் வாழி !
தக்கவரை உலகுக்குப் பரிசாய் நல்கும்
தர்மம்வளர் **தேவகோட்டை** தழைத்து வாழி !
முக்காலும் முத்தமிழாய்ச் சிவனார் கண்ணாய்
முன்னேறும் நன்னகரம் வாழி ! வாழி !